# ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு
# ஊவா மாகாண சபை அரச சேவையின் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் தையல் உபதேசகர் III தரத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

ஊவா மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் வெற்றிடமாக காணப்படும் தையல் உபதேசகர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்காக திறந்த போட்டிப் பரீட்சைக்காக ஊவா மாகாணத்தில் நிரந்தரமாக வதியும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2019.02.22 திகதி ஆகும்.

ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம் : தையல் உபதேசகர் III ம் தரம்

சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) : பொது நிர்வாக சுற்றறிக்கை MN 1-2016 ற்கு ஏற்ப
ரூபா.27,140 – 10x300 – 11x350 – 10x495 – 10x660 - ரூபா.45,540/-

**02. ஆட்சேர்ப்பிற்கான பொதுவான தகைமைகள்:**

(அ) இப்பதவிக்காக பெண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ)விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவு செய்ததன் ஊடாகவோ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(இ)சகல விண்ணப்பதாரர்களும் சிறந்த நன்னடத்தையுடன் மற்றும் ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் வேவை புரிவதற்கும், கடமையினை மேற்கொள்ளவும் நல்ல மன நிலையுடனும் மற்றும் உடல் ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பபடிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று ஊவா மாகாணத்திற்குள் குறைந்தபட்சம் பூரண 3 வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர வதிவினையுடைய விண்ணப்பதாரராக இருக்க வேண்டியதோடு கிராம சேவகரினால் வழங்கப்படும், பிரதேச செயலாளரினால் தொடர் கையொப்பமிடப்படும் சரியான படிவத்தினூடாக பதிவினை சான்றுப்படுதல் வேண்டும்.

(உ) சகல விண்ணப்பதாரர்களும் குறிப்பிட்ட சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரும் இறுதி திகதிக்கு சகல விதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(ஊ)வயது: விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் மற்றும் 45 வயதிற்கு அதிகமாகவும் இருத்தல் வேண்டும்.

**03. கல்வி தகைமைகள் :**

(i) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணித பாடங்கள் உள்ளடங்களாக மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமை சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

(ii) தேசிய பொது தராதர பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணித பாடங்கள் உள்ளடங்களாக மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமை சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்

மற்றும்

(iii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

(iv) தையல் வேளை, மனை விஞ்ஞானம் மற்றும் எம்ராய்டரிங் வேளை மற்றும் கைவினை தொழில், அலகுசாதனம் தொடர்பாக அரசாங்க நிறுவனம் ஒன்றில் ஒரு வருட டிப்ளோமாவினை பின்பற்றி சித்தியடைந்திருத்தல். உதா: கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மனை முகாமைத்துவ டிப்ளோமா.

**04. சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

(அ) இப்பதவியானது நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது

(ஆ) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்கள் ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற கட்டுப்படவேண்டும்.

(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 ற்கு மற்றும் இதற்கு ஈடான சுற்றறிக்கைகளின் விதி முறைகளுக்கு ஏற்ப ஐந்து (05) வருடங்களில் குறித்த மட்டத்தினில் அரச மொழிகள் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**05. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு ஏற்ப வெளிவாரி விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் கீழ் நடாத்தப்படும் சான்றிதழ்கள் பரீட்சிக்கப்படும் நேர்முக பரீட்சையின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முக பரீட்சைக்காக புள்ளிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது.

எழுத்து மூல பரீட்சையில் சித்திப் பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தப்பட்சம் 40% மான பெற்றுக்கொள்ள வேண்டும். எழுத்து மூல பரீட்சையின் விடய ஆய்வு கீழ்வருமாறு ஆகும்.

**06.** போட்டிப் பரீட்சையின் விடய ஆய்வு:
எழுத்து மூல பரீட்சை வினா பத்திரங்கள் இரண்டுடன் கூடியது.

| வினாப்பத்திரம் | | விடய ஆய்வு | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளி மட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | உளச்சார்ப்பு | விண்ணப்பதாரரின் மொழி மற்றும் புள்ளிவிபர தேர்ச்சிகள் தர்க்க தேர்ச்சி மற்றும் சரியான தீர்மானத்தினை எடுக்கும் திறன் ஆகியவற்றை பரிசீலனை செய்யும் முகமாக தயாரிக்கப்படும் வினாப்பத்திரமாகும். | 1 மணித்தியாளம் | 100 | 40 |
| 2 | பொது அறிவு | தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தகவல்கள் உள்ளடங்களான வினாப்பத்திரமாகும். | 1 மணித்தியாளம் | 100 | 40 |

**07. விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

i. இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் தெளிவாக தத்தமது கையெழுத்தினாலேயே நிரப்பப்படுதல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04 வரையிலான பிரிவுகள் முதல் பக்கத்திலும் ஏனையன இரண்டாம் மற்றும் மூன்றாம் பக்கங்களில் காணப்படும் விதத்தில் விண்ணப்பப்படிவத்தினை தங்களாவே தயார்செய்ய வேண்டியதோடு, ஒவ்வொரு தலைப்பிற்காகவும் வழங்கப்பட்டுள்ள உபதேசங்களுக்கு ஏற்ப தெளிவாக தம் கையெழுத்தினாலேயே பூரணப்படுத்தப்படவேண்டும். விண்ணப்பதாரர் பரீட்சைக்கு அமர்வதற்கு எதிர்பார்க்கும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணமாக்கப்பட வேண்டும். தமிழ் மொழியில் முன் வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பானது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிட வேண்டும்.

ii. பூரணமாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2019.02.22ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, இலக்கம் 14/4, பீலிபொதகமை வீதி, பிங்கராவை, பதுளை" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உரையின் இடது மேல் மூளையில் "ஊவா மாகாண சபை அரநாங்க சேவையின் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் தையல் உபதேசகர் தரம் III ற்கு ஆட்சேர்ப்பு செய்தலிற்கான போட்டிப் பரீட்சை – 2018" என தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**08. கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரினால் / சமாதான நீதவான் ஒருவரினால் / சத்திய பிரமாண ஆணையாளரினால் / பொது நொதாரிஸ் / முப்படையின்

அதிகாரம் உள்ள அலுவலர் / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியிலுள்ள பொலிஸ் சேவையின் அலுவலர்/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியினை வகிக்கும் ரூபா. 230,700/- னை அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தினை பெறும் நிறைவேற்று மட்ட அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிதல் வேண்டும்.

**09. பரீட்சை மற்றும் நிர்வாக செலவுகள்:**

பரீட்சை மற்றும் நிர்வாக செலவீனம் ரூபா. 600/- ஆகும். இத்தொகையை ஊவா மாகாண பிரதான செயலாளரின் வருமான தலைப்பு 20.03.02.13 ற்கு வரவு வைக்கப்படும் வகையில் ஊவா மாகாணத்தில் காணப்படும் எந்தவொறு பிரதேச செயலாளர் காரியாலயத்திலும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் முதல் பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்ப வேண்டியது கட்டாயமாகுவததோடு, தேவை கருதி அதன் நிழல்பிரதியினை தம்மிடம் வைத்திருத்தல் நன்மை பயப்பதாகும். ஊவா மாகாண பிரதேச செயலாளர் காரியாலயமொன்றில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டிற்கு புறம்பாக வேறு நிறுவனங்களில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளைகள் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன், எந்தவொறு காரணத்திற்காகவும் இப்பரீட்சை கட்டணமானது திருப்பி செலுத்தப்படமாட்டாது.

**10.** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருக்கும் நபர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற தீர்மானத்தின் பேரில் சரியான முறையில் விண்ணப்பங்களை முன் வைத்துள்ளவர்களுக்கு சான்றிதழ் பரிசீலனையின்றி போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது விண்ணப்பதாரர் குறித்த பதவிக்கான தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படாது. நேர்முக பரீட்சை சந்தர்ப்பங்களில் தேவையான தகைமைகளை வழங்கி இல்லாமை தெரியவந்தால் அவ்விண்ணப்பதாரர் நியமனம் பெறுவதற்கு தகைமையற்றவராக கருதப்படும்.

**11.** திறந்த போட்டிப் பரீட்சை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவினால் பதுளை நகரில் நடாத்தப்படும். போட்டிப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்களுக்கு தங்களது விருப்பின் பேரில் ஒரு மொழி மூலத்தில் மாத்திரம் முழு பரீட்சைக்கும் அமர வேண்டும்.விண்ணப்பங்கள் முன் வைக்கப்பட்ட பின்னர் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிப்படாது.

**12.** பரீட்சையன்று விண்ணப்பதாரரின் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுப்படியாகக் கூடிய தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுப்படியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் முன் வைத்தல் வேண்டும். இவை தவிர்ந்த வேறு ஆவணங்கள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**13. பொய்யான தகவல்களை வழங்குதல்:**

இப்பரீட்சையில் அமர்வதற்காக பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமை இல்லை என தெரிய வந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைப்பெறும் போதோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது எந்தவொறு சந்தர்பத்திலோ அவரின் பரீட்சை உரிமை இரத்து செய்யப்படும். சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் விண்ணப்பதாரர் வழங்கிய யாதேனும் தகவல் பொய்யானதாக அல்லது வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார் என தெரிய வந்தால் அல்லது பிழையான தகவல்களை வேண்டும் என மறைத்துள்ளார் என தெரிய வந்தால் அவரின் சேவையானது முன் அறிவித்தல் இன்றி முடிவுறுத்தப்படும்.

**14.** இப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் / செய்யாமலிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையினது ஒரு பகுதியினை நிரப்புதல் அல்லது வெற்றிட எண்ணிக்கை தொடர்ப்பில் அல்லது இது தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்ப்பில் இறுதித் தீர்மானமானது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும். அதேபோல இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின் அது தொடர்ப்பில் விவரித்தல் / தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு ஊடாக மேற்கொள்ளப்படும்.

காமினி மஹிந்தபால ஜோபியஸ்
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

2019.01. ம் திகதி
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு
பதுளை.